**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 22.09.2025**
**OS. No. 140/2022**
**வழக்கு சாட்சி PW.1–பொன்னுவேல் , த/பெ.பழனி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் யார் சொன்னது என்றால் நான் தான் என் வழக்கறிஞரிடம் சொன்னேன். பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் மீது தான் வழககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்துக்கள் எந்தெந்த இடத்தில், எவ்வளவு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பட்டா வசந்தாபரமேஸ்வரி என்பவர் பெயரில் உள்ளது. அதில் ச.எண்.38/2B1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பட்டாவில் கண்ட நிலத்தில் தான் நான் தடம் கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். **அந்த பட்டா கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.801 ச.எண்.46/2A என்பதும் பிரதிவாதி வசந்தாபரமேஸ்வரி என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா **கணினி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பி.வா.சா.ஆ–2 பட்டாவில் கண்ட சொத்தில் நான் தடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். ச.எண்.38/2B1 குறித்து என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ச.எண்.38/2B என்று குறிப்பிட்டுள்ளோம்.

2) ச.எண்.38/2B என்பது தான் ச.எண்.38/2B1 ஆக ஆனது என்றும், தற்போது நிலையில் ச.எண்.38/2B என்று எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ச.எண்.38/2B க்கு ஏதேனும் பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ.7 வரையில் உள்ள ஆவணங்களில் ச.எண்.38/2B க்கு உண்டான பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். நிலையில் இல்லாத சொத்திற்கு பரிகாரம் கோருவதால் இந்த வழக்கு

நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ச.எண்.38/2C க்கு உண்டான பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) ச.எண்.38/2B மற்றும் ச.எண்.38/2C ஆகியவற்றில் தடவழி செல்வதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாவில் எத்தனை அயிட்டங்களாக சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் இரண்டு அயிட்டங்களாக உள்ளது. அதிலுள்ள விவரங்கள் சரியா என்றால் சரிதான். அதில் 1வது அயிட்ட சொத்தில் தான் தடம் செல்வதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்குண்டான பட்டா எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வரைபடத்தில் ச.எண்.38/2B மற்றும் ச.எண்.38/2C என்று ஏதேனும் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. தடத்திற்கு கிழபுறம் ச.எண்.41 என்று அந்த வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதோபோல் அதன் கீழ் தென்புறத்தில் ச.எண்.46 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.46 மற்றும் ச.எண்.41 ஐ தாவா சொத்து என்று அதில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்துக்களில் ச.எண்.46 மற்றும் ச.எண்.41 குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ச.எண்.46/2B என்ற சொத்தை குறித்தும் வா.சா.ஆ.4 வரைபடத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ–4 வரைபடத்தில் 1A, 1B, 1C, 1D2, 1E என்று குறிப்பிட்டுள்ள பகுதியின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட 1A, 1B, 1C, 1D2, 1E பகுதிகளில் தான் இரும்பு பேக்டரி உள்ளது என்றால் சரிதான். அந்த பேக்டரிக்கு ஒட்டினார்போல் கிழபுறம் புறம்போக்கு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள தடவழிக்கு மேற்குபுறம் ஒட்டினார்போல் அந்த புறம்போக்கு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த புறம்போக்கு நிலங்கள் சுமார் 100 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். அந்த புறம்போக்கு நிலங்கள் அனைத்தும் தற்போது விவசாயம் எதுவும் செய்யப்படாமல் காலியாக உள்ளது என்றால் சரிதான். அந்த புறம்போக்கு நிலங்களுக்கும், பேக்டரிக்கும் இடையே பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

5) அந்த பஞ்சாயத்து ரோடு தெற்கு நோக்கி இறுதிவரை செல்கிறது என்றால் சரிதான், அது 35 அடி அகலம் கொண்ட ரோடு என்றால் சரிதான். அந்த ரோடு அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த ரோட்டிலிருந்து ஒரு ரோடு பிரிந்து என்னுடைய ச.எண்.46/2B ல் சென்றடைகிறது என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு ரோடு செல்கிறது என்றும், மேற்கண்ட அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட ரோட்டிலிருந்து என்னுடைய இடத்திற்கு செல்ல 100 அடி தொலைவு தான் இருக்கும் என்றும், அந்த 100 அடி தொலைவும் பஞ்சாயத்தால் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 35 அடி ரோடு என்னுடைய இடத்திற்கே செல்கிறது என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் நீதிமன்றத்தில் ஆணையரை நியமிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்டு குறிப்பிட்டுள்ள நிலங்கள் அனைத்தும் பிரதிவாதியுடையது என்றால் சரிதான், அவருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டுள்ளது. எனக்கு 35 அடியில் ரோடு உள்ளதால், பிரதிவாதியின் பட்டா நிலத்தில் தடவழி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.4 வரைபத்தில் தடவழியாக காண்பிக்கப்பட்டதற்கு கிழக்குபக்கம் பெருமாள் என்பவரின் நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அதற்கு தெற்குபுறம் சென்றாய பெருமாள் கோவில் மானிய நிலம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்து மாதேஷ் என்பவரின் நிலம் உள்ளது என்றால் சரியல்ல, அவ்வாறு யாருடைய நிலமும் இல்லை. ச.எண்.41 மற்றும் ச.எண்.46 ஆகியவற்றை தாவா 1 வது அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளதால் வா.சா.ஆ.4 வரைபடமே தவறானது என்றால் சரியல்ல. மேற்கண்ட நிலத்துக்காரர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனாலும் என் வழக்கு தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வரைபடத்தில் தடவழியாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலிருந்து மேற்குபுறம் 100 அடி தொலைவில் 35 அடி ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு வளைவுகள் இன்றி நேராக செல்கிறது என்றால், நேராக சென்று ஒரு இடத்தில் மட்டும் வளைந்து நேராக செல்கிறது. அந்த ரோட்டிற்கு கிழபுறமுள்ள நிலங்கள் அனைத்தும புறம்போக்கு நிலங்கள் என்றால் சரிதான்.

7) அந்த புறம்போக்கு நிலங்களையும், ரோட்டையும் வா.சா.ஆ.4 வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு காண்பித்தால் அது என்னுடைய நிலத்திற்கு சென்றடைவது தெரிந்துவிடும் என்பதற்காக காட்டவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தடவழி 35அடி ரோட்டில் இருந்தும் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்யவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தடம் கோரியுள்ள இடத்திற்கு மேற்குபுறமும், பஞ்சாயத்தார் ரோட்டிற்கு கிழக்குபுறமும் உள்ள இடத்தில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு நான் ஒரே மகனா என்றால் ஆமாம். என் தந்தை உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 பாகபிரிவினை பத்திரத்தின்படி எங்கள் தாத்தா மூலம் வந்த சொத்தை நானும், என் தந்தையும் பாகம் பிரித்துகொண்டோம் எ ன்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் தான் அதில் கண்ட சொத்திற்கு எனக்கு உரிமை வந்தது என்றால் சரிதான். என் தந்தையுடன் பிறந்த சகோதரர் தான் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான். அதேபோல் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற சொத்தை பொறுத்து பிரதிவாதிதான் உரிமையாளர் என்றால் சரிதான்.

8) என் தந்தைக்கு நான் ஒரே மகன் என்பதால் பாகம் பிரிக்கவில்லை என்றாலும், என் தந்தை சொத்து முழுவதும் எனக்கு தான் வந்திருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 பாகபிரிவினை பத்திரத்தில் என் தந்தைக்கு எதுவும் நிலம் ஒதுக்கவில்லை என்றால் சரிதான். நான் என் தந்தையை மிரட்டிதான் வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு நிலம் எதுவும் ஒதுக்காமால் ரூ.10,000/-மட்டும் கொடுத்தது போல் அவரை மிரட்டி அந்த பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டாவானது என் தந்தை உயிருடன் இருந்தபோதே வாங்கிவிட்டேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ 2 ஆகியவற்றை என் தந்தையை மிரட்டி நான் வாங்கியுள்ளதால் இந்த வழக்கில் அதை ஆதாரமாக எடுத்துக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-7 ஆனது நான் ஒப்பந்தம் செய்து கொண்டது என்றால் சரிதான். ஆனால் அந்த ஒப்பந்த பத்தித்தின் அடிப்படையில் உரிமை மாற்றம் எதுவும்செய்யவில்லை என்றால் சரியல்ல.

அந்த பத்திரத்தை 10 நபர்களை அழைத்து வந்து பிரதிவாதியை மிரட்டி அவரிடம் கைரேகை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

9) பிரதிவாதியின் கணவர் மற்றும் மகன் பெங்ளூரில் உள்ளார்கள் என்றும், பிரவாதியும் அவரது மகள் மட்டும் தான் இங்கு உள்ளார்கள் என்றும், ஆண் துணை யாரும் இல்லாததால் நான் ஆட்களை வைத்து கைரேகை பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒப்புக்கொண்டு வா.சா.ஆ.7 ல் கைரேகை வைக்கவில்லை என்றும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு தடவழி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி காவல்நிலையத்தில் என் மீது புகார் அளித்துள்ளாரா என்றால் ஆமாம். அந்த புகாரின் மீது நடந்த விசாரணையில் என்னுடன் நான் அழைத்து வந்த அடியாட்களை பஞ்சாயத்தார்கள் என்று சொல்லி அவர்கள் அந்த பத்திரத்தையும் கிழித்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 பத்திரத்திலும் ச.எண்.38/2B என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் ச.எண்.38/2B1 என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதனாலும் அந்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.

10) பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த மொத்த சொத்துக்களையும் மேற்கண்ட ஆவணத்தில் தடமாக காண்பித்து எழுதியுள்ளேன் என்றும் அதனாலும் அந்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தில் எந்தவிதமான உரிமை மாற்றமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு உரிமைமாற்றம் செய்யாத ஒரு ஆவணத்தை வைத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள்ளவாறு தடம் எதுவும் இல்லை என்றும், அதனாலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 15.10.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.